பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

25 ] சென்னை—ஞாயிறு. செப்டம்பர் 29, *1946*. [ விலை. அணா. 2

## அஹிம்சையால் என்ன பயன்?

கேள்வி:—இன்று உலகத்தில் எங்கு திரும்பிப் பார்த்தாலும் ஹிம்சையும், அதிகார மோகங் கொண்ட அரசியலும் தவிர வேறெதுவும் காணோம். இங்கிலாந்து அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகளிலும் கூட இதே நிலைமைதான். இந்த நிலைமையில் உங்களுடைய அஹிம்சை என்ன சாதிக்க முடியும் என்பதைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து யோசிப்பீர்களா?

பதில்:—எங்கு பார்த்தாலும் அதிகார மோக அரசியல் காணப்படுவது உண்மைதான். ஆனால் இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ உண்மையான ஜன நாயகம் இருப்பதாக நீங்கள் எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஜனங்களுடைய வாக்கை கடவுள் வாக்காகக் கூறலாம். ஆனால் ஒரு தேசத்து ஜனங்கள் பிற தேசங்களைக் கெடுத்து வாழ்பவர்களாயிருந்தால் அவர்களுடைய வாக்கை எப்படி கடவுள் வாக்காகக் கூற முடியும்? இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள வெள்ளைக்காரர்கள் வேறு நிறமுடைய ஜனங்களைக் கெடுத்து வாழ்ந்து வருகிறார்கள். எந்த ஜனங்கள் கக்ஷி பேதம் பாராட்டாமல் இருக்கிறார்களோ அந்த ஜனங்களுடைய வாக்குதான் கடவுளுடைய வாக்காகும். கடவுள் தமது தராசில் ஒவ்வொரு தேசத்து ஜனங்களையும் உண்மையையும் அஹிம்சையையும் கொண்டே நிறுத்துப் பார்க்கிறார். என்னுடைய அஹிம்சை நொண்டியுமில்லை. பலவீனமானதுமில்லை. அது சகல வல்லமையுடையதாகும். அஹிம்சையுள்ள இடத்தில் உண்மையிருக்கும். உண்மைதான் கடவுள். அவர் எப்படித் தம்மை வெளிப்படுத்திக்கொள்கிறார் என்பதை நான் சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவர் சர்வ வியாபகமாக இருக்கிறார் என்பதும் அவர் உள்ள இடத்தில் எல்லாம் க்ஷேமமாயிருக்கும் என்பதுமேயாகும். ஆதலால் அனைவர்க்கும் பொருத்தமான விதி ஒன்றே ஒன்று தான். எங்கெல்லாம் உலகத்தில் உண்மையும் அஹிம்சையும் ஆட்சிசெய்கின்றனவோ அங்கே தான் சாந்தியும் சந்தோஷமும் உண்டு. இப்பொழுது அவைகள் எந்த இடத்திலும் காணப்படவில்லை என்பதைக்கொண்டு அவைகள் இல்லவே இல்லை என்று எண்ணிவிடக்கூடாது. தற்சமயம் அவைகள் நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து மட்டுமே இருக்கின்றன. ஆனால் அவைகள் எப்பொழுதும் அப்படியே மறைந்து இருந்து விட முடியாது இந்த நம்பிக்கை தான் அஹிம்சைக் கொள்கையில் நம்பிக்கையுடைய என்போன்றவர்களுக்கு தைரியமளித்துக் கொண்டிருக்கிறது.

புது டெல்லி — 19-9-46 — மோ. க. காந்தி.

## இன்னும் அன்னியரை வைத்துக் கொள்வதா?

கேள்வி:—அன்னியர்கள் இங்கே இந்தியரைப் போலவே வாழத் தீர்மானித்தால் அவர்களை சுதந்திர இந்தியா விலக்கிவிடாது என்று கூறுகிறீர்கள். ஆனால் இந்த மாதிரி எந்த தேசத்திலாவது நடந்திருக்கிறதா? தேசிய உணர்ச்சி தலைதூக்கும் பொழுது சமூக ஆணவம் கொஞ்சமேனும் இருந்து கொண்டிருக்கும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா? சுதந்திர இந்தியாவில் இந்தமாதிரி நடக்காது என்று கூற முடியுமா?

பதில்:—அன்னியர்கள் இந்த நாட்டில் இருக்க எண்ணுவதைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. என்னுடைய இந்த எண்ணம் உறுதியானது. இதற்கு ஆதாரமாக தக்கச்சான்று கூற முடியும். ஆனால் அதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆனால் அன்னியர்கள் இந்த நாட்டு ஜனங்களைப் போலவே தங்களையும் எண்ணிக்கொண்டால்தான் அவர்கள் இங்கு தங்குவதை நாம் வரவேற்க முடியும். இதை நாம் மறந்து விடக்கூடாது. அன்னியர்கள் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய பாதுகாப்புகளைப் பெற்றுக் கொண்டு இங்கே தங்கி இருக்க விரும்பினால் இந்தியா அதற்குச் சம்மதிக்க முடியாது. பாதுகாப்புகளோடு தங்கியிருக்க விரும்புவது நம்மைவிட உயர்ந்தவர்களாக எண்ணிக்கொண்டு இங்கே தங்கி இருக்க விரும்புவதேயாகும். அந்த நிலைமை சச்சரவு உண்டாக்கும். பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இப்பொழுதுள்ள சச்சரவு இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் இருக்க வேண்டிய அவசியமில்லை. இருதேசத்தவருக்கும் இடையில் சச்சரவு இருந்து கொண்டிருக்கும் வரையில் இந்தியா சுதந்திரம் அடைந்ததாகக் கூற முடியாது.

புது டில்லி — 19-9-46 — மோ. க. காந்தி.

## உணர்ச்சி காரணமில்லை.

ஆசிரியர் பிரிஜ் நாராயண் உப்புவரியை ஆதரித்து லாகூர் டிரிபியூன் பத்திரிகையில் இரண்டு பத்திகள் எழுதியிருக்கிறார். ஆராய்ச்சியாளனாக இல்லாத சாதாரண மனிதனாகிய என்னுடைய மனத்தைக் கொஞ்சங்கூட மாற்றக்கூடியதாயில்லை அவருடைய வாதங்கள். நான் உப்பு வரியை ரத்து செய்ய வேண்டுமென்று அறிவு காரணமாகச் சொல்லாமல் உணர்ச்சி காரணமாகச் சொல்வதாக அவர் முடிவு கட்டுகிறார். ஆனால் அதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. அவர் நாற்காலியில் சாய்ந்து கொண்டு அரசியலும் தத்துவமும் பேசுகிறவர். ஜனங்கள் விஷயம் அவருக்குத் தெரியாது. உப்புவரி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரை மட்டுமின்றி ஆடு மாடுகளையும் மீன்களையும் கூடப் பாதிக்கிறது. அதனால் அதை உடனே ரத்து செய்யவேண்டுமென்று அறிவே கேட்கின்றது. ஜனங்களுக்குக் கேடுசெய்வது அந்த வரிப்பணமன்று. அதை சர்க்கார் ஏகபோகமாக வைத்துக்கொண்டிருப்பது தான். சர்க்கார் சம்மதமில்லாமல் காற்றை சுவாசிக்கக்கூடாது தண்ணீரைக் குடிக்கக்கூடாது என்று

ஏழைகளுக்குக் கட்டளையிட்டால் என்ன நேரு மென்று யோசித்துப் பாருங்கள். உப்பு விஷயமும் இதே மாதிரிதான். சொந்த உபயோகத்துக்கு வேண்டிய உப்பை எடுத்துக் கொள்ளும் விஷயத்தில் கூட இந்தத் தடை இந்திய மக்களுக்கு எவ்வளவு தீங்கை உண்டுபண்ணி இருக்கிறது என்பதை ஆராய உப்பு வரியை ஆதரிக்கும் இந்த விஞ்ஞானி கொஞ்சங்கூட சிரமப்படவில்லை என்று தெரிகிறது.

உப்புவரி ஜாதி மத வித்தியாசமில்லாமல் எல்லா ஏழை மக்களையும் நசித்து வருகின்றது. அப்படி எல்லா ஏழை மக்களையும் ஒருங்கே பாதிக்கும் உப்பு வரியை ரத்து செய்ய எண்ணுவது தேசீய மயமான காங்கிரஸ் மகாசபைக்கு உகந்ததாகும். ஆனால் ஆசிரியர் பிரிஜ் நாராயண் இதில் என்ன பிரமாதமான தேசீய மிருக்கிறது என்று எண்ணுகிறார். அப்படியானால் இவர் ஏழையான முஸ்லிம்கள் கிடையாது என்று முட்டாள்தனமாக எண்ணுவதாகவே தோன்றுகிறது.

புது டில்லி — 22-9-46 — மோ. க. காந்தி

## தசரத ராமன்

ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதுகிறார்:— ராமனை அமரன் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் எப்படி அவன் தசரதருடைய புத்திரனும் சீதையினுடைய கணவனுமான ராமனாக இருக்க முடியும்? நான் தங்கள் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும்பொழுதெல்லாம் இந்தச் சந்தேகம் உண்டாகிறது அந்தக் காரணத்தால் நான் ராம நாம பஜனையில் சேர்ந்துகொள்ள முடியாதவனாய் இருக்கிறேன். எல்லோரும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் கூறுவது சரியாயிருப்பதால் நான் அதில் கலந்து கொள்ளாதிருப்பது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. தாங்கள் ராம நாம பஜனையை எல்லோரும் கலந்துகொள்ளக் கூடிய விதமாகச் செய்ய முடியாதா?

பதில்:—எல்லோரும் என்பதன் பொருளை ஏற்கனவே விளக்கி இருக்கிறேன். முழுமனதோடு தாளம் பிசகாமல் பஜிக்கக் கூடியவர்கள் எல்லோரும் அதில் கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் மௌனமாக இருக்கவேண்டும். இது ஒரு சிறிய விஷயம். முக்கியமான விஷயம் யாதெனில் தசரதர் புத்திரனை ராமனை எப்படி அமரனென்று சொல்லலாம் என்பதேயாகும். இந்தக் கேள்வியை துளசிதாஸ் முனிவர் தாமே எழுப்பி தாமே பதில் கூறியிருக்கிறார். அந்தப் பதில் அறிவு பூர்வமாக ஆராய்ச்சி செய்ய இடந்தராது. ஹிருதயத்தினால் மட்டுமே அதை அறிய முடியும். நான் முதன் முதலாக ராமனைச் சீதையின் கணவனாகவே வணங்கி வந்தேன். என்னுடைய அறிவும் அனுபவமும் வளர்ச்சி அடைந்த பிறகுதான் ராமனை அமரனாகவும் எங்குமுள்ளவனாகவும் எண்ண ஆரம்பித்தேன். இதைக்கொண்டு சீதையின் கணவனாகிய இராமனை வணங்குவதை நான் விட்டுவிட்டதாக எண்ணவேண்டாம். முதலில் சீதையின் கணவனாக இருந்த ராமன் பிறகு அதைவிட உயர்ந்த ராமனாக ஆகிவிட்டான். இப்படித்தான் உலகம் முன்னேறுகிறது. ராமனை தசரதர் புத்திரனாகமட்டும் எண்ணுகிறவர் ராமனை எங்குமுள்ளவனாகக் கருத முடியாது. ஆனால் ராமனைக் கடவுளாக எண்ணுகிறவர்களுக்கு ராமன் எங்குமுள்ளவனாக இருப்பது போலவே அவனுடைய தந்தையும் எங்குமுள்ளவராக ஆகிவிடுவார். தந்தையும் மகனும் ஒன்றாக ஆய்விடுவார்கள். இதெல்லாம் வெரும் கற்பனை என்று சொல்லக் கூடும். அதற்கு நான் பதில் கூறக் கூடியதெல்லாம் நம்பிக்கையின் அளவே ஞான முண்டாகும் என்பதேயாகும். எல்லா மதங்களும் ஒரே விதையிலிருந்து உண்டானதாக இருக்குமானால் நாம் அவைகளை இணைத்து ஒன்றாக்க வேண்டும்! இன்று அவைகளெல்லாம் வேறு வேறாகவே எண்ணப்படுகின்றன. அதனால்தான் நாம் ஒருவரை ஒருவர் கொன்றுகொண்டிருக்கிறோம். மதத்தை அனுஷ்டித்து அலுத்துப் போகும்பொழுது நிரீஸ்வரவாதிகள் ஆகி விடுகிறோம். நம்மைத் தவிர எதுவும், கடவுள் கூடக் கிடையாதென்று சொல்லி விடுகிறோம். ஆனால் உண்மையான அறிவு பெறும்பொழுது சுயநலம் அழிந்து போகிறது. கடவுளுடைய ஆதிக்கம் உண்டாகிறது. அப்பொழுது ராமன் தசரதனுடைய புத்திரனாகவும் இருக்கிறார். புத்திரனாக இல்லாமலும் இருக்கிறார். ஆதி அந்தமற்ற கடவுளாகவும் இருக்கிறார். தசரதராமனை ஜனங்கள் விரும்பாதிருந்தபோதிலும் யார் யார் ஒன்று சேர்ந்து பிரார்த்திக்கும் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வருகிறார்களோ அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த விஷயம் அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். என்னுடைய நம்பிக்கை எவ்வளவு மதிப்புப் பெறுமோ அறியேன். ஆயினும் என்னுடைய நம்பிக்கை இதுவென்று விளக்கிக் காட்ட முயன்றிருக்கிறேன்.

புது டில்லி, — 16-9-46 — மோ. க. காந்தி

## கதர்க் கடைகள்

நான் கராச்சி காதிபந்தரில் நடந்த சம்பவங்களைப் பற்றி எழுதிய பிறகு மற்ற பந்தர்களைப்பற்றியும் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அவற்றின் சாராம்சத்தைக் கீழே தருகிறேன்:—

(1) கதர்க் கடைகளைக் கவனித்துவரும் ஊழியர்களுடைய நண்பர்களுக்கும் அவர்களிடத்தில் செல்வாக்குள்ளவர்களுக்கும்தான் கதர் கிடைக்கிறது.

(2) கதர்க் கடையில் ஏராளமாகக் கதர் இருந்தபோதிலும்கூட சாதாரணமானவர்களிடமெல்லாம் கதர் இல்லை என்றே சொல்கிறார்கள்.

(3) சில கடைகளில் கதராக நெய்து தரும்படி நூலைக் கொடுத்தால் அதற்கு வசதி இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். சில கடைகளில் ராட்டினமோ மற்ற கருவிகளோ கேட்டால் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள்.

(4) இந்த நிலைமையில் அநேக கதர் கடை மானேஜர்கள் எவ்வித வேலையும் செய்யாமலே ஊதியம்பெற்று வருகிறார்கள்.

(5) சில கடைகளில் நூல் கொண்டு கொடுத்தால் இது முரடாயிருக்கிறது என்று சொல்லி எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள்.

பதில்:—இப்படிக் குறை கூறுவதெல்லாம் உண்மையானவையல்ல என்று நான் என்னைச் சமாதானப் படுத்திக்கொள்ளலாம். ஆனால் அது சரியன்று. இந்த மாதிரி கதர் கடை அதிகாரிகள் நடந்துகொள்வது அறிவீனம். கதருக்குத் துரோகம் செய்வதும் நெஞ்சில் ஈரமற்றதுமாகும். இந்தமாதிரி குறைகள் எந்தக் கடையிலுமே ஏற்படக் கூடாது. அப்படி இருக்க கதர் கடைகளில் ஏற்படுவது மிக மிகக் கண்டிக்கக் கூடியதாகும். கதருக்கு ஊழியம் செய்பவராகச் சொல்பவர்கள் இந்தவிதமாக நடந்து கொண்டால் எப்படிக் கதர் நாட்டில் மரியாதை செய்யப்படும்? ஒவ்வொரு கதர்க் கடையும் ஊழியத்திற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தன்னையும் உயர்த்திக்கொள்ளும். கதரின் கௌரவத்தையும் சிதையாமல் காக்கும்.

புது டில்லி, — 22-9-46 — மோ. க. காந்தி

## மந்திரிகளா? துரைகளா?

கேள்வி:—காங்கிரஸ் மந்திரிகள் தாங்கள் வகிக்கும் ஸ்தானத்தில் முன்னிருந்த இங்கிலீஷ் அதிகாரிகளைப் போலவே சம்பிரமமாக வாழவேண்டுமா? அவர்கள்

தங்கள் சொந்த காரியமாக சர்க்கார் மோட்டார்களை உபயோகிப்பது சரியா ?

பதில் :—இந்த இரண்டு கேள்விகளுக்கும் ஒரு பதில்தான். காங்கிரஸ் மகாசபை இதுவரை ஜனங்கள் ஸ்தாபனமாக இருந்ததுபோல் இனிமேலும் இருந்துவரவேண்டுமானால் மந்திரிகள் துரைகள் மாதிரி வாழ முடியாது. சர்க்கார் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்ட வசதிகளைச் சொந்தக் காரியங்களுக்காக உபயோகிக்கவும் முடியாது.

புது டில்லி, — 20-9-46 — மோ. க. காந்தி.

## உண்மையையும் அஹிம்சையையும் விலக்க வேண்டாம்

ஊழியரென்று சொல்லிக்கொள்ளும் ஒரு நிருபர் எழுதுகிறார் :—

“ நான் தங்கள் ஹரிஜனபந்து பத்திரிகையை ஒழுங்காகப் படித்து வருகிறேன். தாங்கள் சமீபத்தில் திரு. சங்கரராவ் தேவுக்கு எழுதிய பதிலில் காங்கிரஸ் அமைப்பிலிருந்து உண்மையையும் அஹிம்சையும் விலக்கிவிட வேண்டுமென்று தாங்கள் சில காலமாக சொல்லி வருவதாக எழுதியிருக்கிறீர்கள்.

அப்படி நீக்கிவிட்டால் இப்பொழுதுள்ள நிலைமையில் ஜனங்கள் காங்கிரசிடம் தங்களுக்குள்ள நம்பிக்கையை இழந்து விடுவார்கள். காங்கிரஸ் பதவி ஏற்கும்வரை உண்மையையும் அஹிம்சையையும் கைவிடாமல் இருப்பது நல்லதென்று எண்ணிற்று என்றும் இப்பொழுது பதவி ஏற்றுவிட்டதால் அவற்றை கைவிட எண்ணிவிட்டது என்றும் ஜனங்கள் எண்ணுவார்கள். முஸ்லீம் லீக் நேரடி நடவடிக்கை நடத்தப் போவதாகக் கூறுகிறதே அதைத் தடுக்கும் பொருட்டே இப்பொழுது உண்மையையும் அஹிம்சையையும் கைவிட்டுவிட எண்ணுகிறார்கள் என்றும் ஜனங்கள் எண்ணுவார்கள்.

உண்மையும் அஹிம்சையும்தான் காங்கிரஸ் மகாசபையை இப்பொழுதுள்ள உயர்ந்த ஸ்தானத்திலேற்றி வைத்திருக்கின்றன. ஆதலால் அவைகளைக் காங்கிரஸ் அமைப்பிலிருந்து நீக்கிவிட்டால் காங்கிரஸின் உயர்வு போய்விடும். கௌரவமும குறைந்து போகும். உண்மையையும் அஹிம்சையையும் கைவிட்டுவிட்டால் ஒரு அடிகூட என்னால் முன்னேற முடியாதென்று நீங்கள் எப்பொழுதும் கூறிவந்திருக்கிறீர்கள். உண்மையையும் அஹிம்சையையும் அனுஷ்டிப்பதால்தானே காங்கிரஸ்காரர்களை ஜனங்கள் நம்பத்தகுந்தவர்களாகவும் தைரியமுள்ளவர்களாகவும் சேவை செய்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும் எண்ணி வருகிறார்கள். வேரை அழித்தால் மரம் பட்டுப்போகும். வேரை ஆழமாகப் போகும்படி செய்யவேண்டுமேயன்றி அறுத்துவிடக்கூடாது.

ஆதலால் இந்தக் கொள்கையை அனுஷ்டிக்கும்படி நீங்கள் ஒவ்வொரு காங்கிரஸ்காரர்களையும் கட்டாயப் படுத்தவேண்டும். அனுஷ்டிக்க மறுப்பவர்கள் காங்கிரஸை விட்டு விலகிவிட வேண்டும்.”

பதில் :—அஹிம்சையை நிலைநாட்ட விரும்பும் நான் நல்ல காரியம் செய்யும்பொழுது கூட யாரையும் கட்டாயப் படுத்துவதெப்படி? அடிமையாயிருந்து தவறு செய்யாதிருப்பதைவிட சுதந்திரமாயிருந்து தவறு செய்வது பன்மடங்கு மேலானது என்று புகழ்பெற்ற ஒரு ஆங்கிலேயர் கூறியிருக்கிறாரல்லவா? அவர் கூறும் உண்மையை நான் பரிபூர்ணமாக நம்புகின்றேன். யாரைக் கட்டாயப்படுத்தி நல்லவிதமாக நடக்கும்படி செய்கிறோமோ அவருடைய மனமானது நல்ல விதமாக ஆக முடியாது. முன்னிலும் அதிக கெட்டதாகவே ஆகிவிடும். கட்டாயப் படுத்துவதை நிறுத்தியதும் எல்லாக் குறைகளும் முன்னிலும் அதிகமாகத் தலை காட்ட ஆரம்பித்து விடும்.

அதுவும் தவிர யாரும் சர்வாதிகாரியாக இருக்கக் கூடாது. காங்கிரஸும் கூட உண்மையையும் அஹிம்சையையும் அனுஷ்டிக்கும்படி தன்னுடைய அங்கத்தினர்களைக் கட்டாயப் படுத்தக்கூடாது. அங்கத்தினர்கள் அவைகளைத் தாங்களாகவே மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த வார்த்தைகளை காங்கிரஸ் அமைப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று முஸ்லிம்லீக் நேரடி நடவடிக்கை நடத்தப்போவதாக சொன்ன பிற்பாடு நான் சொல்லவில்லை. ஒரு வருஷகாலமாகவே சொல்லி வருகிறேன். என்னுடைய சிபார்சுக்கும் முஸ்லிம்லீகின் தீர்மானத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

சிலர் நான் என்ன சொன்னாலும் கெட்ட எண்ணம் கற்பிப்பது வழக்கமாயிருந்து வருகிறது. அதைத் தடுக்க ஒன்றும் செய்ய முடியாதவனாயிருக்கிறேன். அந்த வார்த்தைகளை விலக்கிவிட வேண்டுமென்று சொல்வதற்குச் சரியான காரணங்கள் இருக்கின்றன. காங்கிரஸ் உண்மை அஹிம்சை என்று சொல்லிக்கொண்டு உண்மைக்கு மாறாகவும் அஹிம்சைக்கு மாறாகவும் நடத்தலாகாது. பல காரணங்கள் அதற்குக் கூறலாம். ஆனால் இது ஒன்று போதாதா? காங்கிரஸ்காரர்கள் ஏமாற்றாதவர்களாக இருக்க விரும்பினால் இந்த இரண்டு கொள்கைகளையும் அனுஷ்டித்துத் தீரவேண்டியது அவசியமாகும்.

காங்கிரஸ் பதவி ஏற்ற உடனே எந்த ஏணியின் உதவியால் அந்த ஸ்தானத்திற்கு வந்ததோ அந்த ஏணியைத் தள்ளிவிடும்படி நான் எப்படி யோசனை கூற முடியும்? காங்கிரஸ்காரர்கள் பதவியிலிருக்கும் பொழுது உண்மையையும் அஹிம்சையையும் கைவிட்டு விட்டால் காங்கிரஸுக்குள்ள புகழ் ஒளி மங்கிப் போகும்.

நாம் எல்லோரும் ஒரு தவறு செய்யாமல் இருக்கும்படி கவனித்துக் கொள்ளவேண்டும். காங்கிரஸ் அமைப்பில் காணப்படாததை அனுஷ்டிக்கக் கூடாதென்று எந்த விதியும் கூறவில்லை. இந்த மொழிகளை நீக்கிவிட்ட பிறகும் காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலோர் மனப்பூர்வமாக உயிரைக் கொடுத்தேனும் உண்மை அஹிம்சைக் கொள்கையைக் கடைப்பிடிப்பார்கள் என்றே எண்ணுகின்றேன்.

நான் தெளிவாக்க விரும்பிய ஒருவிஷயத்தை இந்த நிருபர் கூற மறந்து விட்டார். காங்கிரஸ் அமைப்பில் உண்மை, அஹிம்சை என்ற வார்த்தைகள் கிடையா. “சமாதான மானதும் நியாயமானதும்” என்ற வார்த்தைகள் தான் உண்டு. அந்த வார்த்தைகளுக்கு வேறு அர்த்தமிருக்குமானால் அவைகளை “உண்மையானதும் அஹிம்சையானதும்” என்று அர்த்தப் படுத்த எனக்கு உரிமை கிடையாது. காங்கிரஸ் அவைகளை மதக் கொள்கையாக ஏற்றுக் கொள்ளாமல் சமயோசிதக் கொள்கையாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறது, அந்த வார்த்தைகளை வைத்துக்கொள்வதும் நீக்கிவிடுவதும் என்னைப் பொருத்த விஷயமென்று. ஆனால் அவை காங்கிரஸ் அமைப்பில் இருக்கும் வரை சமயோசிதக் கொள்கையானாலும் மதக்கொள்கையாகவே மதிக்கப்பட்டுக் கட்டாயமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும். சமாதானமான என்பதை பலாத்காரமான என்றும், நியாயமான என்பதைப் பொய்யான என்றும் அர்த்தப் படுத்தினால் என்னுடைய சிபார்சுக்கு எவ்வித அர்த்தமும் கிடையாது.

புது டில்லி, — 21-9-46 — மோ. க. காந்தி

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூடசுந்தரம், நாமக்கல் கவிஞர்

செப்டம்பர் 29 ஞாயிறு 1946

## உணவுப் பஞ்சம்

பயம் நிறைந்த சூழ்நிலையைப் போல் மனத்தை சோர்வடையும்படி செய்யக் கூடியது, வேறெதுவும் கிடையாது. ஒரு சமயத்தில் சபர்மதி நதியில் மிகப்பெரிய பிரவாகம் வந்தது. அப்பொழுது நடுராத்திரியில் சர்தார் படேல் அனுப்பியதாக ஒரு செய்தி வந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் ஆசிரமத்திற்குள் ஜலம் வந்து விடுமென்றும் உடனே காலி செய்யா விட்டால் எல்லாம் தண்ணீரில் அமிழ்ந்து போகுமென்றும் அந்தச் செய்தி கூறிற்று. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய நாங்கள் எல்லோரும் மிகுந்த கவலை யடைந்தோம். கோபாவேசத்தோடு வந்த பிரவாகம் சில சொத்துக்களை மட்டும் அழித்துவிட்டு. குறைந்து விட ஆரம்பித்து விட்டதாகவும், உயிர்ச்சேதம் ஏற்படுமென்று பயப்படவேண்டிய அவசிய மில்லை என்பதாகவும் அறிந்த பொழுது நாங்கள் மனக் கலக்கம் நீங்கி கடவுளுக்கு வந்தன மளித்தோம்.

அது போலவே சர்க்கார் போதுமான உணவு இல்லாமல் போய்விடக் கூடும் என்று கூறுவதைக் கேட்டதும் நமக்குப் பீதி உண்டாகிறது. பட்டினியை விட பயமே மனத்தை இடிந்து போகும்படி செய்யக் கூடியதாகும். திருவிதாங்கூர் திவான் அந்த சமஸ்தானத்தில் இரண்டு வார காலத்திற்கு மட்டும் போதுமான உணவே இருக்கிறது என்று சொன்னதாக, ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்ததும், எனக்கு அந்த விதமான பயம் உண்டாயிற்று. திருவிதாங்கூரை நான் நன்றாக அறிவேன். ஆதலால் இந்தச் செய்தியைப் பார்த்ததும், திருவிதாங்கூருக்கு மட்டுமின்றி இந்தியா முழுவதற்கும் வரக்கூடிய கேடுகள் என் மனக்கண் முன் வந்து நின்றன. திருவிதாங்கூர் கிழங்குகள், தேங்காய்கள், மீன்கள் ஆகிய உணவுப் பொருள்கள் விஷயத்தில் மிகுந்த செழிப்புடைய பிரதேசம். ஆதலால் திருவிதாங்கூருக்கு இந்தியாவின் மற்ற பாகங்களிலிருந்து, வேறு விதமான உணவுப் பொருள்கள் வராவிட்டாலும் அந்த சமஸ்தானம் ஒரு நாளைக்குக் கூட பட்டினி இருக்க வேண்டிய அவசிய மில்லை. திருவிதாங்கூர் விஷயத்தில் இந்த விதமான நம்பிக்கை எனக்கு இருப்பதால் எனக்கு ஏற்பட்ட பயம், தோன்றிய உடனேயே மறைந்து போய விட்டது. அத்துடன் அங்கே குறைவாக இருப்பதாகச் சொல்வது உணவன்று, கோதுமையும் அரிசியும்தான் என்பதை அறிந்ததும் அளவற்ற சந்தோஷ மடைந்தேன். திருவிதாங்கூர் கோதுமையை விளைவிக்க முடியாது. அரிசியைத்தான் விளைவிக்க முடியும். அங்குள்ளவர்கள் அரிசி உண்பவர்கள். அதனால் கோதுமை உண்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. நாம் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் வேறு வேறு வழக்க பழக்கங்கள் வைத்திருப்பதை விட்டு விட்டு இந்தியா முழுவதற்கும் ஒரே விதமான வழக்க பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு இந்தியாவில் எந்த பிரதேசத்திற்குப் போனாலும் நம்முடைய பிரதேசத்தி லிருப்பது போலவே எண்ணிக் கொள்ளும்படியாக, இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்த கஷ்டங்கள் நமக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஆசைப் படுகிறேன்.

ஆயினும் தற்சமயம் இந்தியாவிலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்கள் எல்லோரும், நமக்கு வேண்டிய உணவுக்காக அயல் நாட்டை எதிர்பார்த்துக் கொண்டு நிற்காமல் நாமே நம்மால் இயன்றளவு உணவை உற்பத்தி செய்யவும், நாம் உற்பத்தி செய்யும் உணவைக் கொண்டே ஜீவனத்தை நடத்திக் கொள்ளவும் வேண்டு மென்று தத்தம் பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்குக் கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும். உணவு சம்பந்தமாக நம்பத் தகுந்த இடங்களிலிருந்து எனக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அவைகளை வைத்துப் பார்த்தால் சாகபட்சணிகள் காய் கறிகளும், பாலும் சாப்பிட்டு பட்டினி இல்லாமல் செய்து கொள்ளலாம் என்றும், மாமிச பட்சிணிகள் காய் கறிகளோடு மாம்சமோ மீனோ சேர்த்துச் சாப்பிட்டு, பட்டினி இல்லாமல் செய்து கொள்ளலா மென்றும் தெரிகிறது.

நமக்கு அயல் நாட்டிலிருந்து போதுமான அளவு உணவு இன்னும் வந்து சேரவில்லை என்பதை இந்திய மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பல அயல் நாட்டார் நமக்கு உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணத்தோடுதான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் சிலர் தங்களுக்கே போதுமான உணவு இல்லாமல் தவிக்கிறார்கள். இன்னும் சிலர் தாங்கள் உதவி செய்ய வேண்டியவர்களுக்கு உதவி செய்ய முடியாமல் தத்தளிக்கிறார்கள். அத்துடன் கப்பல் வசதிக் கஷ்டம் அதிகமா யிருக்கிறது. அப்படியே அயல் நாட்டிலிருந்து உணவு வந்தாலும் அதை உள் நாட்டில் பல இடங்களுக்கு அனுப்புவதும், வினியோகிப்பதும் தனிப் பிரச்னைகள் ஆகும். ஆதலால் கஷ்டத்தை அனுபவிக்க நம்முடைய மனதை தைரியப் படுத்திக் கொண்டு நாமே நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உண்டாக்கிக் கொள்வோம் என்றும், உண்டாக்க முடியாமல் போனால் தைரியமாக உயிர் துறப்போம் என்றும், எல்லோரும் ஏக மனதாக உறுதி செய்து கொள்வது தான் அனுபவ சாத்திய மான அறிவாகும்.

இந்த ஒரு வழிதான் உண்டு. வேறு வழி கிடையாது.

புது டில்லி — 21-9-46 — மோ. க. காந்தி.

## அளவுக்கு மிஞ்சிய ரேஷன்

டில்லியிலுள்ள நண்பர் ஒருவர் தாமும் தம்முடைய கணவரும் சம்பாதிப்பதாகவும் தங்கள் இருவருக்கும் சேர்ந்து ஐநூறு ரூபாய் கிடைப்பதாகவும் என்னிடம் சொல்கிறார். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஒவ்வொரு வாரமும் எவ்வித கஷ்டமுமின்றி நண்பர்களுக்கு விருந்தளிக்கக் கூடிய அளவு அவர்களுக்கு கோதுமை மிஞ்சிவிடுகிறது. டில்லியிலும் இதரப் பட்டணங்களிலும் வீடு வீடாகச் சென்று எவ்வளவு உணவுப் பொருள் மீதியாகிறதென்று கணக்கெடுக்க வேண்டுமென்றும் தானிய ரேஷனைக் குறைத்துக் கொள்ளக் கூடியவர்கள் அதைப் பிறர்க்குக் கொடுக்க வேண்டுமென்றும் அந்த அம்மையார் யோசனைக் கூறுகிறார்.

மனமிருந்தால் மனமுவந்து செய்யும் முயற்சியால் எவ்வளவோ காரியம் சாதித்து விடலாம். இந்த நெருக்கடியான சமயத்தில் எந்த விதமான விருந்தும் நடத்தலாகாது. விருந்து நடத்தினாலும் அந்த விருந்தில் தானியப் பொருள்கள் எதையும் உபயோகப் படுத்தலாகாது.

புது டில்லி, — 22-9-46 — அமிர்தகௌரி.

## தண்டிக்கத்தக்க அளவு உணவை வீணாக்குவது

ஒரு நண்பர் தம்முடைய சொந்த அனுபவத்தை வைத்து ஒரு நீண்ட கடித மெழுதியிருக்கிறார். அதன்

சாராம்சத்தைக் கீழே தருகிறேன். ஜனங்களின் கவனக்குறைவாலும் திறமையின்மையாலும் எவ்வளவு அமோகமாக உணவுப்பொருள்கள் நஷ்டமாகின்றன என்பதற்கு ஐந்து உதாரணங்கள் கொடுக்கிறார்.

(1) தானியங்களைத் தக்கபடி பாதுகாத்து வைக்காததால் எலிகளும் பூச்சிகளும் நாசமாக்கி விடுகின்றன.

(2) தானியங்கள் கடைகளிலும் ரயில்வே சாமான் அறைகளிலும் பெரிய மளிகைகளிலும் மழை ஜலம் பட்டு கெட்டுவிடுகின்றன.

(3) மளிகைகளின் முன்னும் சில்லரைக்கடைகளின் முன்னும் தானியங்களை மூடாமல் கொட்டி வைப்பதால் ஏராளமான பக்ஷிகள் வந்து தின்றுவிடுகின்றன.

(4) ஓட்டையுள்ள பழைய கோணிப் பைகளில் போட்டு அயலூர்களுக்கு அனுப்புவதால் இடை வழியில் சிந்திச் சிதறிப் போகின்றன.

(5) தானியத்தைச் சுத்தம் செய்யாமல் அனுப்புவதால் அதிகமான வண்டிச்சத்தம் கொடுக்க நேர்ந்து உற்பத்தி செய்பவர்க்கும் வாங்கி உண்பவர்க்கும் நஷ்டமாகின்றது.

சரியானபடி பாதுகாத்து வைக்காததால் ஏற்படும் நஷ்டம் வருஷத்தில் 35 லட்சம் டன் தானியம் என்றும் மற்ற நான்கு காரணங்களால் ஏற்படும் நஷ்டம் 15 லட்சம் டன் என்றும் கணக்கிடப்படுகிறது. ஆகவே ஆண்டுதோறும் இந்த ஐந்து காரணங்களாலும் 50 லக்ஷம் டன் நஷ்டமாகிறது. எலிகளும், பூச்சிகளும் தானியத்தின் சிறந்த பாகங்களைத் தின்று விடுவதால் நமக்கு நல்ல தானியங்கள் கிடைப்பதில்லை. தானிய வியாபாரிகள் இதைக் கவனிப்பதில்லை. அதிகாரிகளும் அலக்ஷியமாயிருக்கிறார்கள். தானிய வியாபாரிகள் தானியங்களைப் பாதுகாத்து வைப்பதற்காக சரியான கட்டிடங்கள் வைத்துக் கொள்ளும்படி சட்டம் செய்ய வேண்டுமென்று இந்த நிருபர் யோசனை கூறுகிறார். தளத்தையும், சுவரையும் நன்றாகப் பூசி, வெள்ளையடித்து பூச்சிநாசினி கொண்டு சுத்தம் செய்து எலி அறுக்காதபடி பலமான கதவுகளை அமைத்து விட்டால் பாதி நஷ்டம் குறைந்து விடும். இப்பொழுதுள்ள கிடங்குகளின் வெளிச் சுவரில் சுடு செங்கல்லை ஒட்டி வைத்துப் பூசுவது நல்லது.

இது விஷயத்தில் சர்க்கார்தான் நல்ல கிடங்குகள் கட்டி அதன் நன்மையை ஜனங்களுக்கு விளக்கிக் காட்ட வேண்டும். லாகூருக்கும், லயல்பூருக்கும் இடையில் திறந்த டிரக்குகளில் ஆயிரக் கணக்கான கோதுமை மூட்டைகள் மேலே மூடப்படாமல் அடுக்கி வைத்திருந்ததையும் அதன் மேல் மழை கொட்டிக் கொண்டிருந்ததையும் அதைக் கொஞ்சமும் கவனியாமல் அதிகாரிகள் இருந்து விட்டதையும் இந்த நிருபர் நேரில் கண்டதாகக் கூறுகிறார். அன்று ஒருநாள் அந்த மழையில் நாசமாய்ப் போன தானியம் 40 ஆயிரம் மணங்கு கோதுமையாகும். இடை வழியில் தானியம் சிந்திப் போய் நஷ்டமாகாமல் இருப்பதற்காக வியாபாரிகள் புதிய இரட்டைக் கோணிகளை உபயோகிக்க வேண்டுமென்று சட்டம் செய்ய வேண்டும்.

தானியத்தை விளைகிற இடத்திலேயே சுத்தம் செய்வது நல்லது. அப்படிச் செய்தால் பயிர் செய்பவர்க்கு நல்ல விலை கிடைக்கும். சாவி சண்டுகள் கோழிக்கும் ஆடு மாடுகளுக்கும் நல்ல தீனியாகும். அயலூருக்கு அனுப்பும் செலவிலும் மிச்சமாகும்.

சர்க்கார் உணவு வாங்குவதற்காக 150 கோடிரூபாய் செலவு செய்கிறார்கள். உணவுப் பொருள்கள் நாசமாவதும் 150 கோடிக்கு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது தவிர நாம் வீடுகளில் கவனமின்றி வீணாக்குவதையும் எங்கெங்கே காலி இடமுண்டோ அங்கெல்லாம் உணவுப் பொருள்கள் உண்டாக்க வேண்டுமென்பதையும் இன்னும் சாகுபடி செய்யக் கூடிய நிலம் எவ்வளவு இருக்கிறதென்று கண்டு பிடிக்க வேண்டுமென்பதையும் சாகுபடி செய்ய எவ்வளவு ஜலம் கிடைக்கக் கூடும் என்பதையும் இந்த நிருபர் குறிப்பிடுகிறார். பட்டினங்களில் சாணத்தை அடுப்பெரிக்க உபயோகிப்பதை தடுக்க வேண்டுமென்றும், குப்பை கூளங்களைச் சரியானபடி பக்குவப்படுத்தி உரமாக உபயோகிக்க வேண்டுமென்றும் அவர் சிபார்சு செய்கிறார்.

புது டில்லி, — 19-9-46 — அமிர்த கௌரி.

(பஞ்சம் வராமல் தடுக்க வேண்டுமானால் இந்த நிருபர் கூறும் யோசனைகளெல்லாம் உடனடியாக அனுஷ்டிக்கப் படவேண்டும். அது முடியாத காரியமன்று.

மோ. க. காந்தி.)

## உணவு ரேஷன்

இந்தியாவில் உணவு ரேஷன் செய்யும் விஷயத்தில் ஒரு தவறு நடந்து வருகிறது. தானியத்தைச் சேகரிக்கும் செலவையும் வண்டிகளில் கொண்டு வரும் செலவையும் கிடங்குகளில் சேகரித்த வைக்கும் செலவையும் கடைகளுக்கு விநியோகம் செய்யும் செலவையும் உணவின் விலையில் சேர்த்து விடுவதுதான் அந்தத் தவறு. இப்படிச் சேர்த்து விடுவதால் உணவை உற்பத்தி செய்கிறவர் என்ன விலைக்குக் கொடுக்கிறாரோ அதைவிட 30 முதல் 50 சதமானம் வரை அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால்,

(1) உற்பத்தி செய்கிறவர் தமக்கு தானியம் தேவைப்பட்டால் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று பயந்து தானியத்தை விலைக்குக் கொடுக்க விருப்பமில்லாமல் இருக்கிறார்.

(2) சர்க்கார் தலையிடுவதைக் கண்டு அஞ்சி விவசாயி அதிகமான நிலத்தில் பயிர்செய்யத் தயங்குகிறார்.

(3) இப்படி அதிக லாபம் வைத்து விற்கப்படுவதால் கள்ளத்தனமாக விற்க ஆசையுண்டாகிறது.

ஆதலால் உணவைச் சேகரிப்பது போன்ற காரியங்களுக்காகச் செலவாகும் பணத்தை விலையோடு சேர்க்காமல் சர்க்காரே கொடுக்க வேண்டும். விவசாயிகளிடம் வாங்கின விலைக்கே ஜனங்களுக்கு விற்க வேண்டும்.

அத்துடன் உணவுப் பொருள்களின் விலையை இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னதாகவே நிர்ணயம் செய்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் உணவை உற்பத்தி செய்கிறவர் தமக்கு இன்ன விலைக்கு கிடைக்குமென்று முன்கூட்டியே அறிந்து கொள்வார். உணவை உண்பவர் இன்ன விலை கொடுத்து வாங்க வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்வார்.

விவசாயிக்குக் கொடுக்கும் பணத்தைத் தவிர இதர செலவுகளை யெல்லாம் சர்க்காரே செலவழித்தால் கீழ்க்கண்ட நன்மைகள் உண்டாகும்:—

(1) கள்ள விற்பனை அடியோடு ஒழிந்து போகும். அதிகமாக உணவை உற்பத்தி செய்வது அதிகரிக்கும். விவசாயி தம்மிடமுள்ள உணவை சந்தோஷமாக விற்கத் தயாராயிருப்பார். உணவை உண்பவர்க்கு தம்முடைய ஜீவனத்திற்கு இவ்வளவு பணம் தேவையென்று முன்கூட்டித் தெரிந்து கொள்ள முடியும்.

(2) வாழ்க்கைக்கு வேண்டிய இதர இன்றியமையாத பொருள்களெல்லாம் ஒரேவிதமாக குறைந்த விலையில் கிடைக்க எதுவாகும்.

இப்படிச் சர்க்கார் செலவழிக்க வேண்டிய பணத்தை ரேஷன் கண்ட்ரோல் இல்லாத பொருள்களின்மீது விற்பனை வரி விதித்து சம்பாதித்துக் கொள்ளலாம். ஆடம்பர வஸ்துக்களுக்கு அதிகமான வரியை விதிக்கலாம். இப்படிச் செய்தால் அவசியமில்லாததும் ஆடம்பரமானதுமான பொருள்களை வாங்குவோர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் போன்றவைகளை எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும்படி செய்பவர்கள் ஆவார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் உயிருக்கோ ஆரோக்கியத்துக்கோ அவசியமில்லாத பொருள்களை வாங்குகிவர்கள் அவசியமான பொருள்கள் எவ்வளவு குறைந்த விலைக்கு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்ய முடியுமோ அவ்வளவு குறைந்த விலைக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டியவராவார்கள்.

மாரிஸ் பிரைட்மென்

## கைராட்டின வகுப்பு

திரு கனு காந்தி தாம் கைராட்டின வகுப்பை பதினேரு நாட்கள் நடத்தியதன் அனுபவத்தை எழுதியிருக்கிறார் :—

“இந்த வகுப்பு தோட்டிகள் சேரியில் 11-9-46 முதல் 21-9-46 வரை நடந்தது. 156 ஆண்களும் பெண்களும் 3 குழந்தைகளும் கலந்து கொண்டார்கள். அவர்களில் 5 வயதுக் குழந்தையு முண்டு, 75 வயதுக் கிழவியும் உண்டு. பாடசாலைகளின் விடுமுறை கழிந்துவிட்டதாலும் சிலர்க்கு நோய் கண்டுவிட்டதாலும் இறுதியில் இருந்தவர்கள் 126 பேர்தான். 11 வது தினத்தன்று பரீட்சை நடந்தது. அதில் 51 பெண்களும் 59 ஆண்களும் கலந்து கொண்டார்கள். இரண்டு வகுப்புக்களாகப் பிரித்துவைத்து நடத்தினேம். காலையில் 7 மணி முதல் 11 மணி வரை நடந்தது, அப்பொழுது வந்தவர்கள் பெரும்பாலோர் உத்யோகஸ்தர்கள். மாலையில் 2 மணி முதல் 5-30 வரை நடந்த வகுப்புக்கு வந்தவர்களில் பெரும்பாலோர் பெண்கள். சாரசரியாக ஒவ்வொருவரும் அந்த 11 நாட்களில் 30 மணி நேரம் கல்வி பயின்றிருக்கிறார்கள்.

கல்வி கற்க வந்தவர்களில் 20 பேர்க்கு ஏற்கெனவே நூல் நூற்கத் தெரியும். ஆனல் மற்ற காரியங்கள் எல்லோர்க்கும் புதிதுதான். முதலில் ராட்டினங்கள் குறைவாக இருந்தபடியால் அவர்கள் வீட்டில் போய் நூற்க முடியவில்லை. பிறகு ராட்டினங்கள் தயார் செய்து விட்டோம். அவர்கள் வீட்டிலும் நூற்று வந்தார்கள்.

பரீட்சையில் அவர்கள் கீழ்க் கண்ட வேகத்தில் நூற்றார்கள்,

ஒருமணி நேரத்தில்

| | | | |
|---|---|---|---|
| 23 | பேர் | 60 | சுற்று |
| 22 | ,, | 75 | ,, |
| 10 | ,, | 90 | ,, |
| 17 | ,, | 100 | ,, |
| 8 | ,, | 125 | ,, |
| 5 | ,, | 150 | ,, |
| 1 | ,, | 239 | ,, |

நூற்ற நூலின் நம்பர் 19 முதல் 25 வரை. விரைவாக நூற்காதவர்கள்தான் பருமனை நூல் நூற்றார்கள்.

ஜனங்களுக்கு உற்சாகம் ஊட்டும் பொருட்டு, 22-ம் தேதி ஒரு கண் காட்சி ஏற்படுத்தினேம். பிரவேசக் கட்டணம் ஒரு அணு. பழயகாலத்து ராட்டினங்களும் நவீன எர்வாடா, கிசான், மகன், மூங்கில் ராட்டினங்களும் காட்டப்பட்டன. பஞ்சு வெட்டும் வில் முதலிய சாதனங்களும் வைக்கப்பட்டிருந்தன. உரோமத்தை நூலாக்கும் ராட்டினமும் இருந்தது.

இடது கை மட்டுமுள்ள ஒருவர் எர்வாடா ராட்டினத்தைக் காலால் சுற்றிக்கொண்டு இடது கையால் நூல் நூற்றது ஆச்சரியமாக இருந்தது. அவர் மணிக்கு 240 சுற்று நூல் நூற்ருர்.

மற்றோரிடத்தில் பல விதமான பருத்திகளும் நூல்களும் வைக்கப்பட்டிருந்தன. “தேவகுபாஸ்” என்னும் மரம் இருந்தது. அநேக விதமான ஆயுதங்களின் படங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன. காந்தியடிகளுடைய பிறந்த தினத்தன்று அவரிடம் சமர்ப்பிப்பதற்காகவுள்ள 78 லட்சம் நூலும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

கஸ்தூரிபாய் பாலிகா ஆச்ரமத்தையும் ஹரிஜன் கைத்தொழில் பாடசாலையையும் சேர்ந்த சிறுவர்களும் சிறுமிகளும் டில்லி கதர் பந்தரைக் சேர்ந்த ஊழியர்களும் வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தார்கள். பொது ஜனங்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாக உற்சாகம் காட்டினர்கள். திரு. ஜெயப் பிரகாஷ் நாராயணன் கண்காட்சியை பகல் 1 மணிக்குத் திறந்து வைத்தார். மாலை 5 மணி வரை திறந்து வைக்க எண்ணியிருந்தோம். ஆனல் கூட்டம் அளவுக்கு மிஞ்சி அதிகமாய்விட்டதால் மாலை 2 மணிக்கு கூட்டத்தை ஒரு மணி நேரம் நிறுத்தி வைத்துக் கொண்டு காட்சிப் பொருள்களையெல்லாம் வெளியே மைதானத்தில் கொண்டு போய் வைத்து ஜனங்களை வந்து பார்க்கும்படி சொன்னேம். போட்டிகள் மாலை 2-30 முதல் 5 வரை நடந்தன. போட்டி நடத்திய விஷயங்கள் நூல் நூற்றல், பஞ்சு அரைத்து வெட்டி திரி செய்தல், கண்ணை மூடிக் கொண்டு நூற்றல், நூல் அறு படாமல் நூற்றல் என்பன வாகும். 500 பேர் மிகுந்த உற்சாகத்துடன் போட்டியிட்டார்கள்.

பிரார்த்தனை ஆரம்பமாவதற்கு முன் ஒன்று சேர்ந்து நூற்பதில் வந்துகலந்து கொள்ள பல தலைவர்கள் ஒப்புக்கொண்டிருந்தார்கள். ஆனல் கூட்டத்தைச் சமாளிக்க முடியாமற் போனதால் அவ்விதம் செய்ய முடியவில்லை. ஒன்று சேர்ந்து நூற்பதை தோட்டிகள் சேரியில் தான் நடத்தினேம். அரை மணி நேரம் நடந்தது. அதில் ஜவஹர்லால் நேரு, கபர்கான், ராஜேந்திர பாபு, பக்ருதீன் சாகிப், ஜகஜீவன் ராம், பட்டாபி, திரு சங்கரராவ் தேவ் ஆகியோர் கலந்து கொண்டார்கள். கபர்கான் 66 சுற்றும் ஜவஹர்லால் நேரு 100 சுற்றும் நூற்றார்கள்.”

ராஜேந்திர பாபு காலையில் தோட்டிகள் சேரியில் தேசீயக் கொடி ஏற்றி வைத்தார். இந்த நூல் நூற்பு வகுப்பு மிகுந்த நன்மை அளித்தது என்பது என்னுடைய அபிப்பிராயம். கற்கவந்தவர்களின் தொகையும், ஜாதியும், விடா முயற்சியும் கவனிக்க வேண்டியவை. கண் காட்சியைப் பார்க்க ஆயிரக் கணக்கான மக்கள் வந்திருந்தார்கள். தலைவர்களும் நூற்றார்கள். இவை எல்லாம் கதர் வெகு சீக்கிரம் முன்னேறி விடும் என்பதற்கான நல்ல அறிகுறிகளாம். விடா முயற்சி எவ்வளவு சாதிக்க முடியும் என்பதை அறிந்து கொள்வது நல்லது.

புது டில்லி, — 24-9-46 — மோ. க. காந்தி.

## 78-வது பிறந்த தினம்

இந்த வருஷம் காந்தியடிகளுடைய 78 வது பிறந்த தினமும் கஸ்தூரிபாய் காந்தி அம்மையாருடைய

இறந்த தினமும் ஒன்றாகவே இருக்கிறது. காந்தியடிகளுக்கும் கஸ்தூரி அம்மையார்க்கும் நூல் நூற்றலே அதிகப் பிரியமான விஷயம். ஆதலால் தோட்டிகள் சேரியில் 22ம் தேதி காந்தி ஜயந்தி கொண்டாடப் பட்டபொழுது நூல் நூற்றல் சம்பந்தமான காரியங்களே அதிகமாக நடைபெற்றன.

அன்றைய விழாவை தேசியக்கொடி யேற்றத்துடன் ஆரம்பிக்க ஏற்பாடு செய்திருந்தது. டாக்டர் ராஜேந்திரபாபு கொடியேற்றிவைக்க ஒப்புக்கொண்டிருந்தார். விழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவர் கொடி ஏற்றிய பிறகு ஹரிஜனக் குழந்தைகளுக்குப் பலகாரங்கள் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். இந்த விஷயம் எப்படியோ அன்று அதிகாலையில் காந்தியடிகளுடைய காதுக்கு எட்டிற்று. அதைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டுப் போனார். அவர் வழக்கம் போல் தம்முடைய மனத்தை ஆராய ஆரம்பித்தார். தம்முடைய தோழர்கள் கை ராட்டினத்தின் தத்துவத்தை மறந்து விட்டதாக அவருக்குத் தோன்றிற்று.

அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டம் நடந்த போது அவர் கூறியதாவது :—

நாம் அனைவரும் சரி சமானமானவர்கள் என்றும் இந்த உலகப் பொருள்களில் சகலர்க்கும் சரி சமானமாக பங்கு உண்டு என்றும் யாரும் பிறரை விட உயர்வாகவோ பண முடையராகவோ இருக்க முடியாது" எனறும் கை ராட்டினம் மெதுவாக இசைத்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் உலகத்தில் இன்று பணத்திலும் பதவியிலும் உயர்வு தாழ்வுகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆனால் இது பரிபூரணமான முட்டாள் தனமாகும். எந்த விதமான வித்தியாசத்தையும் பாராட்டாமல் யமன் எல்லோரையும் கொண்டு போவான் என்பதை நாம் நம்முடைய ஆணவத்தின் காரணமாக மறந்து விடுகிறோம்.

கைராட்டினம் கற்றுக் கொடுக்கும் இரண்டாவது பாடம் யாதெனில், நாம் ஒவ்வொருவரும் உடம்பு வேலை செய்தே நம்முடைய ஜீவனத்துக்கு வேண்டிய பணத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதே யாகும். இந்த வேலையை ருஷ்ய ஊழியர் ஒருவர் "உணவு வேலை" என்று கூறினார்.

உணவு தேவை யில்லாதவர்க்கு உணவு கொடுப்பதும், உடற் சுகத்துக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாக உணவை உபயோகிப்பதும் தவறு என்பதே மூன்றாவது பாடம். இந்த விதமாக நடந்து கொண்டால் நம்முடைய நாட்டில் உணவுப் பஞ்சம் என்பது ஏற்படாது, நாம் அயல் நாட்டை நோக்கி நிற்க வேண்டியது மிராது.

இன்று கொடி யேற்றிய பிறகு ஹரிஜனங்களுக்குப் பலகாரம் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்களுக்கு அவை தேவையில்லை. அவர்கள் பட்டினியால் வதங்கவில்லை. அவர்களுக்கு நாக்கு ருசியான தின்பண்டங்களைக் கொர்டுக்க நினைத்தார்களே, அவற்றைக் கொண்டு உண்மையிலே பட்டினி கிடக்கும் 20 பேர்க்குக் கொடுத்து அவர்களுடைய உயிரை காக்கலாம் அல்லவா? அவர்கள் செய்ய எண்ணியது தண்டிக்கப் படத் தகுந்த குற்றம் அல்லவா? இப்படித் தின்பண்டங்களை வழங்குவது ஹரிஜனச் சேவை என்று அவர்கள் எண்ணியிருந்தால் அவர்கள் தங்களைத்தாங்களாகவே ஏமாற்றியவர்கள் ஆவார்கள். ஹரிஜனங்களுக்கு உண்மையாக ஏற்பட்டுள்ள பசியானது தின்பண்டங்கள் விருப்பும் பசியன்று; மனிதர்களாக நடத்தப் படவும், நல்ல விதமாக வாழக் கற்பிக்கவும், அதற்கான வசதிகளைச் செய்து தரவுமே அவர்கள் விரும்புகிறார்கள். அவைதான் அவர்களுடைய தேவைகள். அவைகளை வழங்க நமக்குப் பொறுமையும் தியாக புத்தியும் விடா முயற்சியும் தேவையாகும். ஹரிஜனங்களுக்கு உணவு கொடுப்பதற்காக நீங்கள் பணம் தந்தால் அதைப் பெற நான் மறுத்து விடுவேன். நான் அவர்களைச் சோம்பேரிகளாகவும் பிச்சைக் காரர்களாகவும் ஆக்க விரும்பவில்லை. பட்டினியால் வாடுகிறவர்களுக்காக உணவைப்பாதுகாக்க அரும்பாடு படுகிறார் நமது உணவு மந்திரி டாக்டர் ராஜேந்திர பிரசாத். அவர் ஊழியர் தந்த பலகாரங்களை உண்டதால் அல்லவா அந்த ஊழியர்கள் மெய் மறந்து இந்தத் தவறைச் செய்ய ஆரமித்தார்கள்! கைராட்டினத்தின் தத்துவத்தைச் சரியாக ஆராய்ந்து கொள்ள விரும்பினால் இங்கு நடந்த சம்பவத்திலிருந்து நாம் எச்சரிக்கையாக இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்."

காந்தியடிகள் தினந்தோறும் தமது உடல் நிலைமையைக் கவனித்து அதற்கேற்றவாறு இந்த உணவுகள் எனக்குத் தயார் செய்ய வேண்டும் என்று கூறுவது வழக்கம். ஆனால் அன்று மாலை தமக்கு வழக்கமாகக் கொடுக்கும் ஆரஞ்சுச் சாற்றைக் கொடுக்காமல் அதற்குப் பதிலாக எலுமிச்சம்பழச் சாற்றைக் கொடுக்குமாறு சொன்னார். எலுமிச்சம் பழமும் வெல்லமும் உபயோகிப்பதை விட்டு விட்டு ஆரஞ்சுப் பழத்தை உபயோகிக்க எனக்கு உரிமை ஏது என்று கூறினார்.

அன்று இரவு அவர் தமது தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் கீழ்கண்டவாறு எழுதினார் :—

"கைராட்டினத்தின் தத்துவத்தை மறந்துவிடுவதாகத் தெரிகிறது. நான் கோப மடைந்தேன். இந்த நிலைமையில் என் கடமை யாது என்று நான் யோசித்திருக்கவேண்டும். கோபவெறி வந்துவிட்டால் பற்றற்று யோசிக்க முடியாமற் போகிறது."

அதன்பின் தம்முடைய நெருங்கிய தோழர் ஒருவரிடம் கூறினர் :—

"என் மனம் அமைதி இழந்துவிட்டது. அமைதியாக நான் யோசித்திருக்கக் கூடாதோ? 125 வருஷம் வாழ்வதற்கு வேண்டிய பற்றற்ற தன்மை என்னிடம் இல்லை என்று தோன்றுகிறது. கைராட்டினமும் கதரும் மெதுவாகவே முன்னேறுவதற்கு அதுவும் ஒரு காரணம் என்று எண்ணுகிறேன். அளவற்ற பொறுமை யில்லையானால் கதர் வெற்றி யடைய முடியவே முடியாது. எந்த விஷயத்திலும் வெற்றியடைய வேண்டுமானால் எடுத்த காரியத்தில் அளவற்ற ஆர்வமும் பரிபூரணமான பற்றற்ற தன்மையும் இன்றியமையாத தேவைகளாகும்."

புது டில்லி. — 26-9-46 — பியாரே லால்.

## காங்கிரஸ்—லீக் ஒற்றுமை

காந்தியடிகள் இப்பொழுது பத்திரிகா நிருபர்களுக்குப் பேட்டி அளிப்பதை நிறுத்திக் கொண்டிருந்த போதிலும் சென்ற வாரம் ஒரு அன்னிய நாட்டு நிருபர்க்குப் பேட்டி அளித்தார்.

அந்த நிருபர் "காங்கிரஸும் லீகும் ஒத்துழைத்தால் இந்தியா சீக்கிரமாகச் சுதந்திரத்தை அடைந்து விடுமல்லவா?" என்று கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள் கூறிய பதில் :—

"ஆம், உண்மைதான். இருதய பூர்வமான ஒத்துழைப்பு ஏற்படுமானால் சீக்கிரமாகவும் கஷ்டமில்லாமலும் முன்னேற்றம் அடைய முடியும். ஆனால் இந்தியா பரிபூரண சுதந்திரத்தை நோக்கி கம்பீரமாகச் சென்று கொண்டிருக்கிறது. காங்கிரஸுக்

கும் லீகுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் பரிபூரண சுதந்தரம் வந்து கொண்டுதா னிருக்கிறது. அதை யாரும் தடுக்க முடியாது. அதை இந்தியா அடைந்தே தீரும். அதற்கு வேண்டிய அளவு இரத்தம் சிந்தியாகி விட்டது.''

### அணு குண்டு

*கிருபர் :—உலகம் முன்னேறி வருவதாக எண்ணுகிறீர்களா? மனிதனுடைய நல்லுணர்ச்சிகள் மழுங்கி வருவதாக எண்ணுகிறீர்களா?*

*காந்தியடிகள் :—*ஆம், உங்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

*கிருபர் :—அணு குண்டைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*காந்தியடிகள் :—*அது விஷயத்தில் என்னுடைய மனத்தைத் திருத்த முடியாது என்று உலகமுழுவதும் நீங்கள் கொஞ்சமும் தயக்க மின்றி பறைசாற்றலாம். ஜனங்களைக் கொல்வதற்காக அணு குண்டை உபயோகிப்பதுவே விஞ்ஞானத்தைத் தீய வழியில் உபயோகிப்பதின் சிகரமாகும்.

*கிருபர் :—அதற்குரிய விஷமாற்று மருந்து யாது? தங்களுடைய அஹிம்ஸை பழசாய்ப் போய் விட்டதல்லவா?*

*காந்தியடிகள் :—*பழசாய் போச்சா? இல்லை. அது தான் இப்பொழுது எஞ்சி நிற்பது. அணுகுண்டால் அழிக்க முடியாதது அது ஒன்றுதான். அணுகுண்டு ஜப்பானில் ஹிரோஷிமா நகரத்தை அழித்துவிட்டதாக நான் கேள்விப்பட்ட பொழுது அணுவளவு கூட அசையவில்லை. அஹிம்சையை ஏற்றாலொழிய விமோசனம் கிடையாது என்று எண்ணிக்கொண்டேன்.

### பண்பாட்டுப் படை யெடுப்பு

இருபது வருஷத்துக் கதிகமாக இந்தியரின் நாகரிக வாழ்க்கையையும் அதிகாரிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் நான் பார்க்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. நான் 100-க்கு 100 இந்தியர்களாக உள்ளவர்களிடையில்தான் வாழ்ந்து வந்தேன். ஆனால் சென்ற வசந்த காலத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு ஐக்கிய மாகாண சர்க்காரின் கௌரவ விசேஷ ஆலோசகர் பதவியை ஏற்றேன். அதன் காரணமாக புதிய சூழ்நிலையில் போய்ச் சேர்ந்தேன். எல்லோரும் ஆங்கிலேயரைப் போல் இருப்பதற்காக முயன்று கொண்டிருந்ததைக் கண்டேன். அது விஷயத்தில் அவர்களுக்குள் பலமான போட்டி நடந்து கொண்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப போனேன். என்னுடைய ஆபீஸ் சிப்பந்திகளைப் பார்த்தேன். எல்லோரும் மில் துணியையே உபயோகித்தார்கள். அழகில்லாத ஆங்கில மோஸ்தர் நிஜார் அணிந்திருந்தார்கள். அதற்குள் ஷர்ட்டுகளை திணித்து விட்டுக்கொண்டு அன்னிய மோஸ்தர் கோட்டுகள் அணிந்திருந்தார்கள். தாங்க முடியாத உஷ்ணமாயிருக்க இந்தக் கோட்டுகள் எதற்கென்று எண்ணினேன். பாதத்தில் இறுக்கமான பூட்சுகள் அணிந்திருந்தார்கள். இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. உடை அந்நியமாயமா யிருப்பது போதாதென்று பெயர்களுக்கு முன்னால் மிஸ்டர் என்று அன்னிய மொழியைச் சூட்டிக்கொண்டிருந்ததையும் கண்டேன். யாரைப் பற்றிப் பேசினாலும் மிஸ்டர் இன்னார் என்றே குறிப்பிட்டார்கள். அதன்பிறகு காவற்காப்போர் அங்கு உத்தரவு உத்தரவு என்று சொன்ன உடனே என்னுடைய துக்கம் அளவுக்கு மிஞ்சி அதிகமாய்விட்டது.

நானும் திகைத்தேன். ஆபீஸிலிருந்தவர்களும் திகைத்தார்கள். என்னை மிஸ் என்றும் மேடம் என்றும் கூறக்கூடாதென்று சொன்னேன். அவர்கள் இந்திய முறையில் எப்படி அழைப்பதென்று தெரியாத அந்நியர்களைப்போல தட்டுத் தடுமாறினார்கள். அவ்வளவு தூரம் அந்நிய நாகரிக மோகம் அவர்களை ஆட்கொண் டிருந்தது. அதனால் அவர்கள் டைப் செய்திருந்த கடிதங்களிலெல்லாம் மிஸ்டர் என்பதை ஸ்ரீ என்று மாற்றி டைப் செய்யும்படி சொன்னேன். சில நாட்கள் சென்றபின் ஐக்கிய மாகாணத்தின் மேற்குப் பகுதியில் நீண்டநாள் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காகப் புறப்பட்டேன். அப்பொழுது புதிய கஷ்டங்கள் தோன்றின. இது இந்தியாதேசம். அப்படி இருந்தும் உத்தியோகஸ்தர்கள் தங்குவதற்காக ஏற்படுத்தியிருந்த கட்டடங்களிலுள்ள சமான்களெல்லாம் இங்கிலீஷ் முறைகளிலேயே அமைக்கப்பட்டிருந்தன. நாற்றமான சோபாக்களும் நாற்காலிகளும் மேஜைகளும் போடப்பட் டிருந்தன. மே மாதத்திலும் ஜூன் மாதத்திலும் இரவில் அதிக உஷ்ணமாயிருக்கும். அப்பொழுது கட்டிலில் படுத்தால் கைகளை தலைக்கு பின்புறம் நீட்டிக்கொள்ள வேண்டுமென்று தோன்றும். ஆனால் அங்குக் போடப்பட்டிருந்த கட்டில்களோ இங்கிலீஷ் கட்டில்கள். தலைப்பக்கம் உயரமான அளிஉள்ள கட்டில்கள். தளத்தில் விரித்திருந்த கம்பளங்கள் ஒரே நாற்றமா யிருந்தன. எத்தனை வருஷத்து அழுக்கும் தூசியும் அவற்றில் குடிகொண் டிருந்தனவோ தெரியாது. நல்ல சுத்தமான காற்றை உள்ளே வரவொட்டாமல் தடுப்பதற்காக ஜன்னல்களில் திரைகள் போடப்பட்டிருந்தன. இவை எல்லாம் போதாதென்று ஒவ்வொரு ஸ்நான அறையிலும் ஒரு ''கமோடு'' வைக்கப்பட்டிருந்தது. கமோடு என்பது ஆங்கிலேயர்கள் உட்கார்ந்து மலங் கழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பாத்திரமாகும். இங்கிலீஷ்காரர்கள்மாதிரி அதன்மேல் உட்கார்ந்து கொள்வது அநேகருக்கு அசாத்தியமான காரியம். கமோடுகள் வைக்கப்பட்டிருந்த ஸ்நான அறைகள் மற்ற அறைகளோடு சேர்ந்தே யிருந்தன. கமோடுகளும் ஆடி அசைந்து கொண்டிருந்தன. சமையலறைகளைப் பற்றியோ எதுவும் சொல்லாதிருப்பது நல்லது. அவ்வளவு மோசமா யிருந்தது.

பேச்சிலும் உடையிலும் வாழ்க்கை முறையிலும் இந்தியருக்கு ஒவ்வாத முறைகள் இவை. இவை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சின்னங்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை விட்டு வெளியேறும் பொழுது இந்தச் சின்னங்களும் வெளியேற வேண்டிய காலம் வந்துவிட வில்லையா?

*மீராபென்.*

---


### காந்திய அரசியல்

காந்தியடிகளின் சிஷ்யர் திரு. எஸ். என். அகர்வால் எழுதியது. மகாத்மாவின் பாராட்டுரையுடன் கூடியது. நாமக்கல் கவிஞர் தமிழாக்கியது.

உலகத்துக்கு உய்யும் வழியைக் காட்டும் உன்னதமான நூல்.

விலை ரூபாய் மூன்று

தமிழ்ப்பண்ணை

தியாகராயநகர், சென்னை.


---

அச்சடித்தவர் பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை